| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி.ஆய்பொண்ணு<br>க.பெ. திரு.ரெங்கராஜ் | அ.வ.எண். 145/2009 | 04.11.2025 |

1,3,6 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்திற்கு விபரங்கள் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். எவ்வளவு சொத்து யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் சுப்ரமணியத்திடம் இருந்து 32 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றேன். நான் மேற்படி நிலத்தை வாங்குவதற்கு முன்பு அதில் குத்தகைதாரர் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2) குத்தகை பதிவேட்டில் எனது பெயர் உள்ளதா என்றால் உள்ளது. அதனை ஆதாரமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 32 செண்ட்டில் குத்தகை ஒரு போகமா, இருபோகமா என்றால் ஒருபோகம். மேற்படி ஒரு போகத்திற்கு எவ்வளவு குத்தகை கொடுப்போம் என்றால் வருடத்திற்கு ஒருமுறை ரொக்கமாக ரூ.1000/– முதல் ரூ.1500/– வரை கொடுப்போம்.

3) அவ்வாறு குத்தகை கொடுப்பதற்கு ரசீது உள்ளதா என்றால் ஆவணம் ஏற்படாததால் ரசீது கொடுப்பதில்லை. எனது கிரைய ஆவணம் வா.சா.ஆ.2 ல் மேற்படி கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தில் நான் முன்னதாக குத்தகைதாரர் என்றும், அதனையே எனக்கு தற்போது கிரையம் கொடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) நான் குத்தகைதாரராக பதிவு செய்தது பொறுத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதுபோல வா.சா.ஆ.2 ல் நான் குத்தகைதாராக

இருக்கும் நிலத்தை எனக்கு கிரையம் கொடுப்பதாக எதுவும் காட்டப்படவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்திற்கு மேற்கில் யாருடைய சொத்து உள்ளது என்றால் மருதை மற்றும் இன்னும் 5–6 நபர்களுடைய சொத்து உள்ளது.

5) மேற்படி நபர்களுக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 36 செண்ட் உள்ளது. மேற்படி 36 செண்ட்டிற்கு மேற்கே கன்னி வாய்க்கால் ஓடுகிறது என்றால் சரிதான். அதன் அருகிலேயே கரைவெட்டி வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். அதற்கும் அருகில் குப்புசாமி என்பவர் 3 செண்ட்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

6) எனது 32 செண்ட் நிலத்திற்கு கிழக்கே யார் சொத்து உள்ளது என்றால் சின்னசாமி வாங்கியுள்ளார் ஆனால் எவ்வளவு இடம் என்று தெரியாது. எனது 32 செண்ட் நிலத்திற்கு கிழக்கே நாகராஜ் என்பவரது சொத்து உள்ளதா என்றால் இல்லை, அஞ்சலை என்பவரது சொத்து உள்ளது. மேற்படி நாகராஜிற்கு கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் நாங்கள் கிரையம் பெற்ற பிறகு நாகராஜ் ஆவணம் ஏற்படுத்தியதாக கூறுகிறார்.

7) மேற்படி நாகராஜ் வாங்கி வைத்ததாக சொல்லும் நிலம் எவ்வளவு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நாகராஜ் 2012ல் 3 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, எனக்கு 32 செண்ட்டும், மருதைக்கு 36 செண்ட்டும் பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி 36 செண்ட்டில் பிரதிவாதிகள் கோட்டைமுனிஸ்வரர், காமாட்சி அம்மன் கோவில் கட்டி வழிபாடு செய்து வருகின்றனர் என்றால் சரிதான், நாங்களும் வழிபாடு செய்வோம்.

8) மேற்படி 36 செண்ட்டில் எத்தனை தென்னைமரங்கள் உள்ளது என்றால் சுமார் 20 மரங்கள் இருக்கும். மேற்படி கோவிலில் வருடா வருடம் திருவிழா நடத்தப்படும் என்றால் சரிதான். மேற்படி கோவிலில் மேடான பகுதி முழுவதும் பந்தல் போட்டு அதில் பொங்கல் இடுவார்கள் என்றால் மேடான பகுதியில் உள்ள எங்களது 8 செண்ட்டை விட்டு தள்ளியே பந்தல் இடுவார்கள்.

9) எனது கிரைய ஆவணத்தில் 32 செண்ட்டில் 8 செண்ட் மேடாகவும், மீதமுள்ளது பள்ளமாகவும் உள்ளதாக குறிப்பாக காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை, ஆனால் மேற்படி 32 செண்ட்டில் இருந்து 22 செண்ட்டில் உள்ள மண்ணை எனது வீடு கட்டுவதற்காக எடுத்துள்ளேன், அதனால் அது பள்ளமாக உள்ளது.

10) நான் மேடான பகுதியில் உள்ள தென்னை மரத்தில் தேங்காய் பறிக்க சென்ற போது பிரதிவாதிகள் அது குறித்து புகார் கொடுத்தார்களா என்றால் அவர்கள் தேங்காய் பறிக்க வந்த போது நான் தடுத்ததால் சுருளி என்பவர் புகார் கொடுத்தார். மேற்படி பிரதிவாதிகள் இடத்தில் தீவணம்புல் உள்ளது என்றால் சரிதான், எனது இடத்திலும் சிறிது உள்ளது.

11) மேற்படி கோவில் ஏற்படுத்தப்பட்டு 75-76 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான், எனது மாமனார், மாமியார் காலத்தில் இருந்தே இருந்து வருகிறது. எனது பட்டா பாஸ்புக்கில் எனக்கு எவ்வளவு செண்ட் காட்டப்பட்டுள்ளது என்றால் 32 செண்ட். எனது நிலத்தின் தற்போது என்ன சாகுபடி செய்துள்ளேன் என்றால் வாழை வைத்துள்ளேன். நெல் பயிரிடுவேனா என்றால் இல்லை, வாழை தான் வைப்பேன்.

12) நான் எனது நிலத்தில் வாழை சாகுபடி செய்துள்ளேன் என்பதற்கு சாகுபடி அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது சொத்திற்கு மேற்கே உள்ள மேடான பகுதி முழுவதையும் பிரதிவாதிகளும் அனுபவிக்கவில்லை, நானும் அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற 32 செண்ட்டை அளந்து வாங்கினேனா என்றால் அளந்து தான் வாங்கினோம், நாங்கள் அளந்த போது அவர்கள் மறுத்ததால் தான் பிரச்சனை.

13) பிரதிவாதிகளின் 36 செண்ட்டை பொறுத்து அவர்கள் அ.வ.எண்.213/2006 வழக்கையும், எங்களது 32 செண்ட்டை பொறுத்து நாங்கள் அ.வ.எண்.145/2009 அதாவது இவ்வழக்கையும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

14) எனது சொத்தின் சர்வே எண் என்ன என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். மேற்படி சொத்து உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம், உட்பிரிவு செய்திருப்பார்கள். அதன் உட்பிரிவு எண் என்ன என்றால் உட்பிரிவு எண் எதுவும் தெரியாது. மேற்படி புல எண் நான் சொல்வது போல் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை, வரைபடம் குறித்து வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

15) அப்படியானால் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை, வரைபடம் குறித்த விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது, அது

வழக்கறிஞருக்கு தான் தெரியும். மேற்படி கன்னிவாய்க்காலுக்கு எந்த பக்கம் பிரதிவாதிகள் சொத்து உள்ளது என்றால் வடக்கு பக்கம் உள்ளது, எனது இடத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது. மேற்படி பிரதிவாதிகளின் 36 செண்ட் குப்புசாமி இடத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் வடக்கே உள்ளது.

16) அ.வ.எண்.213/2006 வழக்கில் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த போது கரைவெட்டி வாய்க்கால், கன்னிவாய்க்கால், குப்புசாமி இடம் ஆகியவற்றை நீக்கிவிட்டு எனது 32 செண்ட்டையும், 36 செண்ட்டையும் மட்டுமே அளவீடு செய்தார்கள் என்றால் சரியல்ல, குப்புசாமி இடத்தை மட்டும் நீக்கிவிட்டு வாய்க்காலுடன் சேர்த்து தான் அளந்தார்கள்.

17) இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்ய வந்தாரா என்றால் வந்தார். இவ்வழக்கிலும் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த போது கரைவெட்டி வாய்க்கால், கன்னிவாய்க்கால், குப்புசாமி இடம் ஆகியவற்றை சேர்த்து தான் அளந்தார் என்றால் சரிதான். மேற்படி கன்னிவாய்க்கால் சுமார் எத்தனை செண்ட் இருக்கும் என்றால் சுமார் 4 செண்ட் இருக்கும்.

18) பிரதிவாதிகள் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்து பார்க்காததால் அதற்கு எனது தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், அது வழக்கறிஞருக்கு தான் தெரியும். மேற்படி அ.வ.எண்.213/2006 வழக்கில் நீதிமன்ற ஆணையர் கரைவெட்டி வாய்க்கால், கன்னிவாய்க்கால், ஆகியவற்றை நீக்கி 36 செண்ட்டை அளவீடு செய்துள்ளார் என்றால் சரியல்ல.

19) அவ்வாறு அளவீடு செய்ததில் மேடு பகுதி முழுவதும் 36 செண்ட் சரியாக இருந்ததாகவும், பள்ளமான பகுதி 29 செண்ட் இருந்ததாகவும், அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மேட்டுப்பகுதியில் எனக்கு 8 செண்ட் கிடையாது என்றால் சரியல்ல.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)